# இளங்கோவின் கண்ணகியும் ஈழத்துக் கண்ணகையும்

**பேராசிரியர் ம. இரகுநாதன்,**
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.ragunathan58@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**

சிலப்பதிகாரம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டிருந்தாலும் பத்தொன்ப தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. அச்சில் பதிப்பிக்கப்படும்வரை தமிழகத்தில் இந்நூல் பற்றிப் பலரும் அறிந்திருக்கவில்லை. ஆனால் ஈழத்தவர்கள் கி.பி. 15ஆம் நூற்றாண்டிற்கும் 17ஆம் நூற்றாண்டிற்கும் இடைப் பட்ட காலப்பகுதி யிலேயே சிலப்பதிகாரம் பற்றி அறிந்திருந்தனர். இக்காலப்பகுதியிலேயே ஈழத்தவர்களால் கண்ணகியின் கதை காவியமாகப் பாடப்பட்டது. இளங்கோ கண்ணகியைச் சாதாரண மானிடப் பெண்ணாகப் படைத்து - இல் வாழ்வில் இன்பம் காணவைத்து இறுதியில் தெய்வீகத்தன்மை உள்ளவளாகப் படைத்துள்ளார். ஆனால் ஈழத்தவர்கள் கண்ணகையைத் தீண்டத்தகாத கற்புடையவளாகவும், அவதாரமாகவும் படைத்ததால் - அவள் இல்லற வாழ்வில் இன்பம் காண்பவளாக இருக்கவில்லை. இறுதிவரை தெய்வீகப் பெண்ணாகவே காணப்படுகிறாள். இதனால் இளங்கோவின் கண்ணகியும் ஈழத்துக் கண்ணகையும் வேறுபாடுகளைக் கொண்டவர்களாக உள்ளனர்.

**திறவுச் சொற்கள்:** தீண்டாத கற்பு, கண்ணகி, கண்ணகை, மாணிக்கம், முத்து.

பூம்புகார் நகரத்துப் பெருவணிகர்களான மாசாத்துவானின் மகன் கோவலன தும் மாநாகரின் மகள் கண்ணகியினதும் வரலாற்றைக் கூறும் இலக்கியங்கள் காப்பிய வடிவிலும் கதைப் பாடல்களாகவும் நாடக வடிவிலும் எனப் பல்வேறு வடிவங்களில் தமிழகத்திலும் ஈழத்திலும் நீண்ட காலமாகவே வழங்கி வருகின்றன. இவை அனைத்திற்கும் சிகரமாக அமைந் திருப்பது இளங்கோவடிகளின் முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரமாகும். சிலப்பதிகாரம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகவே அறிஞர்கள் பலரும் கூறுவர். (ச.வே.சுப் பிரமணியம், 1977) ஏட்டுப்பிரதிகளில் முடங்கிக் கிடந்த சிலப்பதிகாரத்தை 1892ஆம் ஆண்டு உ.வே.சாமிநாதையர் முதன்முதலில் முழுமையாக அச்சிற் பதிப்பித்தார். இவர் இதனைப் பதிப்பிப்பதற்காக தமிழகத்தில் ஏட்டுப்பிரதிகளைத் தேடிச்சென்றபோது இந் நூலின் பெயர் சிலப்பதிகாரமா? சிறப்பதிகாரமா? என்ற சர்ச்சை ஏற்பட்ட தாகத் தனது என்சரித்திரம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். (1982 : ப.685)

மேலும் தனக்கு முன்னர் இந்நூலின் சில பகுதிகளைப் பதிப்பித்த ஒருவர் இது சேரம பெருமாள் நாயனாரால் எழுதப்பட்டது எனக் கூறியிருந்தார் என்பதையும் த சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும் என்ற நூலில் உ.வே.சா. குறிப்பிட் ளார்.(1934: ப.136). எனவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழகத் சிலப்பதிகாரம் பற்றிப் பலரும் அறிந்திருக்கவில்லை என்றே கருத முடிகின்றது.

தமிழகத்தில் பலராலும் அறியப்படாதிருந்த சிலப்பதிகாரத்தையும் அ ஆசிரியரான இளங்கோவடிகளையும் பற்றி ஈழத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டி முன்னரே கண்ணகி வரலாற்றுக் காப்பியம் பாடியவர்கள் அறிந்து வைத்திருந்த சான்றாக கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் பாடப்பட்டதாகக் கருதப்படும் கண் வழக்குரையில் பாடபேதமாகக் காட்டப்பட்டுள்ள விநாயகர் வணக்கப் பாடலொன்றி

"வரிவிழிக் கண்ணகை பொருட்டில் வந்த சிலப்பதிகார
விரிதமிழை யானுரைப்பேன்" (கண்ணகி வழக்குரை. 1968 : ப.02)

என்றும், வழக்குரைத்த காதையில்,

"செவிநாட்டு நாகமணிச் சிலப்பதிகாரக்கதையை" (ப.357 : செய்யுள் 12).
"நாடியிளங் கோவடிகள் நாவலர்க்குப் பொருளாகத்
தேடு சிலப்பதிகாரக் கதையை.." (ப.357: செய்யுள் 14)

என்று வருகின்ற பாடலடிகளில் சிலப்பதிகாரம், இளங்கோவடிகள் ஆகிய பெயர்க வருவதால் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டிலேயே ஈழத்தவர்கள் சிலப்பதிகார பற்றியும் இளங்கோவடிகள் பற்றியும் அறிந்திருந்தனர் எனக் கருத முடிகிறது. வன்னி பிரதேசத்தில் வழங்கி வருகின்ற சிலம்பு கூறலும், யாழ்ப்பாணத்தில் உள்ள கோவலனா கதையும் முன் குடாரிப்பு வெற்றிவேலரின் பெய ராலேயே வழங்கி வருகின்றன. வெற் வேலர் போர்த்துக்கேயர் காலத்தில் சிறையில் இருந்தவாறு இக்காவியத்தைப் பாடி தாக சிலம்பு கூறலின் பாயிரம் கூறுகின்றது. எனவே போர்த்துக்கேயரின் ஆட்சி நிலவி கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் இக்காவியம் பாடப்பட்டிருக்க வேண்டும் பாயிரத்தில்,

"கண்ணகை தன் பட்சமுய்த்த உத்தரவால்
சிலப்பதிகாரக் கதை யுரைப்பதற்கு..." (பாயிரம். செய்யுள் 47)

என வருவதால் இவரும் சிலப்பதிகாரம் பற்றி அறிந்திருந்தார் எனக் கருத முடிகிறது எனவே உ.வே.சா. 1892இல் சிலப்பதிகாரத்தைப் பதிப்பிப்பதற்கு முன்னரே ஈழத்தவர் கள் இந்நூல்பற்றி அறிந்திருந்தனர் எனக் கருதலாம். இந்த ஆய்வில் சிலப்பதிகாரத்தில் கதைத் தலைவியான கண்ணகி தொடர்பாக இளங்கோவும் ஈழத்தவர்களும் கூறியுள்ள வெவ்வேறு விதமான கருத்துக்கள் எடுத்துக்காட்டப்படுகின்றது.

## 01. கதைத் தலைவியின் பெயர்

சிலப்பதிகாரத்தில் இளங் கோவடிகள் கண்ணகி என்ற பெயரையே பயன் படுத்துகின்றார். ஈழத்துக் காப்பிய ஆசிரியர்கள் கண்ணகி, கண்ணகை என இருவிதமாகவும் பயன்படுத்துகின்றனர்.

**02. கண்ணகியின் பிறப்பு**

சிலப்பதிகாரத்தில் மங்கல வாழ்த்துப் பாடலில் அறிமுகமாகின்ற கண்ணகி புகார் நகரத்துப் பெருவணிகனான மாநாய்கனின் மகளாகவே அறிமுகப்படுத்தப்படு கின்றாள். சிலம்பு கூறலில் கண்ணகையம்மன் திருவவதாரம் என்ற பகுதியில் கண்ணகி அவதாரமாகவே காட்டப்படுகின்றாள். பாண்டியன் பிள்ளைவரம் கேட்டுத் தவம் இருந்தபோது சிவனும் உமையும் அவனுக்குக் காட்சி கொடுக்கின்றனர். சிவன், பாண்டியனுக்குப் "பெண் மக வொன்றைத் தந்தேன்" என்று வரமருளுகின்றனர். அவ்வேளையில் உமையின் மார்புக் கச்சு, காற்றால் விலக - பாண்டியன் சிற்றாசை கொண்டு அதனைப் பார்த்துச் சிரிக்கின்றான். இதனால் கோபங்கொண்ட உமையின் கண்களிலிருந்து தீப்பொறிகள் வெளிவருகின்றன. உமையின் கோபத்தைச் சிவன் தணிவித்தபோது தீப்பொறிகள் பலவும் இணைந்து இரண்டு பொறிகளாகி அருகி லுள்ள மாமரத்தில் தங்கி மலர்களாகின்றன. உமை, பாண்டியனுக்கு "உனக்குக் கிடைக்கும் பிள்ளையினால் முலையைத் திருகி எறிந்து மதுரையையும் எரித்து உன்னையும் அழிப்பேன்" என்று வஞ்சினம் கூறுகின்றாள். இதற்காகச் சிவனிடம் வரம் பெற்றுக்கொண்ட உமை மாம்பூவில் தங்கிப் பிஞ்சாகிக் கனியாகிறாள்.

பாண்டியன் கனவு கண்டது போல அஞ்சி சிவனையும் உமையையும் வழி பட்டான். தினமும் பூசைக்கு ஒவ் வொரு கனியாக வீழ்கின்ற மாமரத்தி லிருந்து அன்று இரண்டு கனிகள் வீழ்ந்ததால் பாண்டியன் ஒரு கனியை மறுநாள் பூசைக்காக வீட்டில் பொற்குட மொன்றில் பாதுகாத்து வைத்தான். மறுநாள் காலையில் பார்த்தபோது பொற் குடத்திலிட்ட மாங்கனி அழகிய பெண்குழந்தையாக மாறியிருந்தது. பாண்டியன் குழந்தையை மனைவியிடம் கொடுக்க, அவள் அதற்குப் பாலூட்ட முயன்றபோது கேடு வரும் என்று பல்லி சொல்லியது. சோதிடர்கள் பிள்ளையால் கேடு வரும் என்று கூறியதால் பாண்டியன் பிள்ளையைப் பேழையில் வைத்துக் கடலில் விடுகின்றான்.

காவிரித்துறையில் நின்ற மாநாகரும் மாசாத்தரும் பேழையைக் கண்டெ டுக்கின்றனர். திறந்து பார்த்தபோது இருவரது கண்களும் ஒளியிழந்து பின்னர் பார்வை திரும்புகின்றது. இதனால் பிள்ளைக்குக் கண்ணகை என்று பெயரிட்டனர். மாநாகருக்கு குழந்தை கிடைத்ததும் அக்குழந்தை பருவவயதை அடைந்ததும் மாசாத்தரின் மகன் கோவலனுக்கே அவளை மணம் செய்வது என்று இருவரும் உடன் பட்டுக் கொள்வதாக சிலம்பு கூறலின் திருக்கரத்தமர்தல் என்ற பகுதி விபரிக்கின்றது.

கோவலனார் கதையில் "கோவலர் கண்ணகையம்மன் வரலாறு" என்ற பகுதியில் கண்ணகியின் பிறப்புத் தொடர்பாக சிலம்பு கூறலிலிருந்து வேறு பட்ட கதையொன்று கூறப்படுகின்றது. இதன்படி, பாண்டியனின் தேவி அழகிய தொரு மாங்கனியைக் கண்ணாடியில் வைத்து அழகுபார்த்தபோது அதில் அம்மன் பெண் குழந்தையாக அவதரிக்கின்றாள். இதனையறிந்த பாண்டியன் மறையோரிடம் ஆலோசனை கேட்ட போது அவர்கள் இக்குழந்தையால் மதுரைக்குக் கேடுவரும் எனக் கூறு கின்றனர். இதனால் பாண்டியன் குழந்தையைப் பேழையில் அடைத்துக் கடலில் விடுகின்றான். மாநாகர் கடலில் மிதந்த பேழையைக் கண்டெடுத்து அதனுள் இருந்த குழந்தையை மனைவி யிடம் கொடுக்கின்றார். குழந்தை கண்ணகை என்ற பெயரோடு மாநாகரின் வீட்டில் வளர்கின்றது.

கோவலனார் கதையில், சிலம்பு கூறலில் உள்ளதுபோல காவிரித்துறை மாநாகரும் மாசாத்தரும் நின்றது பற்றியோ இருவரும் பேழையைத் திறந்து பார்த் கண்ணொளி மங்கியது பற்றியோ கண்பார்வை மீண்டும் கிடைத்ததால் குழந்தை கண்ணகை எனப் பெயரிட்டது பற்றியோ கூறப்படவில்லை. இவ்வா கோவலனுக்கும் கண்ணகைக்கும் திருமணம் செய்து வைக்க உடன்பட்டது பற்றி கூறப் படவில்லை. ஆனால் மணமாலை என்ற பகுதியில் திருமணம் பற்றி முன் பேசியதாகக் கூறப்படுகிறது. (கோவலனார்கதை, ப.105, பாடல் 06). கண் வழக்குரையில் அம்மன் பிறந்தகதை என்ற பகுதியில் பரராசமுனிவரின் தவத்தால் உ பெண்குழந்தையே பாண்டியனுக்கு மகளாகிக் கண்ணகை என்ற பெயருட வளர்ந்ததாகக் கூறப்படுகிறது.

பாண்டியனுக்கும் சிவனைப் போலவே மூன்று கண்கள் இருந்தன. இதனா பாண்டியன் மிகுந்த கர்வம் கொண்டவனாக இருந்தான். உமை பாண்டியனி மூன்றாவது கண்ணை அழிக்க விரும்பினாள். சிவனின் திட்டப்படி பரராச முனிவரி மகள் பாண்டி யனின் தோட்டத்து மாங்கனியில் வீற்றிருந்தாள். பாண்டியன் தவசியி அம்பால் வீழ்த்தப்பட்ட மாங்கனியை கைகளால் ஏந்திப்பிடித்தபோது அது அக்கினி பிழம்பாக மாறியது. பாண்டியன் தனது நெற்றியைக் கைகளால் துடைத்தபோ நெற்றிக்கண் மறைகின்றது. பாண்டியனின் தேவி மாங்கனியை வீட்டில் பொற்கு மொன்றில் வைத்தபோது அது மூன்றாம் நாள் அழகிய பெண் குழந்தையாக மா யிருந்தது. சோதிடர்களின் ஆலோசனைப்படி பாண்டியன் குழந்தையைப் பேழையி வைத்துக் கடலில் விடுகின்றாள். மாநாகரும் மாசாத்தரும் அதனைக் கண்டெடுத் கண்ணகைக்கும் கோவலனுக் கும் திருமணமும் நிச்சயிக்கின்றனர் என்றவாறு கண்ண வழக்குரை விபரிக்கின்றது.

### 03. கண்ணகியின் காற்சிலம்பு

இளங்கோவடிகள்சிலப்பதிகார நூற்பதிகத்தில் கண்ணகியின் சிலம்பை "சூழ்வினைச் சிலம்பு" (சிலப்பதிகாரம், செய்யுள் 58) வழக்குரை காதையில் "பொற்சிலம்பு மணியுடை அரியே" (செய்யுள் 67) என்றும் குறிப்பிடுகின்றாரே தவி இச்சிலம்பு தொடர்பாக விரிவான கதை எதுவும் கூறவில்லை. சிலம்பு கூறலி கண்ணகியின் வலது காலில் இருந்த சிலம்பு பிறப்பிலேயே இருந்ததாகவம் அ நாகமணியைத் தரிசாகக் கொண்டது என்றும் கூறப்படுகின்றது. (கண்ணகை திருவவதாரக்கதை: செய்யுள் 201) பிறப்பிலமைந்த நாக மணிச் சிலம்பிற்கு இணையான மற்றொரு சிலம்பை மாநாகர் செய்து கொடுத்ததாகவும் இதற்கு நாகமணி வாங் மீகாமன் நாகதீவுக்குச் சென்று வந்ததாகவும் கடலில் வெடியசன் முதலியோருட போரிட்டதாகவும் ஒரு வரலாற்றைச் சிலம்பு கூறல் விரிவாகக் கூறுகின்றது. (திருக்கரந் தமர்தல் செய்யுள் 324).

கோவலனார் கதையில் கண்ணகியின் பிறப்பில் அமைந்த சிலம்பு பற்றி கூறப்படவில்லை. திருமணத்திற்காகக் கண்ணகி கேட்டுக் கொண்டதற்கிணங்கவே மாநாகர் மீகாமனை அழைத்து நாகதீவிற்கு அனுப்பி நாகமணிவாங்கியதாகவும் கூறப்படுகின்றது. (செல்லையா, 1962: 11). கண்ணகி வழக்குரையில் கண்ணகியின்

காற்சிலம்பிற்கு மானிடர்கள் அணியாத நாகமணியைத் தரிசாக வைத்தது மாநாகரின் விருப்பப்படியே என்றே கூறப்படுகின்றது. (வி.சீ. கந்தையா, 1968 : 23). மாநாகர் நாக ராசனுடன் இருந்த நட்புறவால் மீகாமனை அனுப்பி நாகமணி வாங்கிச் சிலம்பு செய்வித்ததாகக் கதை விபரிக்கின்றது.

எனவே ஈழத்துக் கதைகள் மூன்றும் கண்ணகியின் காற்சிலம்பு நாகமணித் தரிசுடையது என்றே கூறனாலும் சிலம்புகூறல் ஒற்றைச் சிலம்பு பிறப்பில் அமைந்தது என்றும் அதற்கு இணைச் சிலம்பையே மாநாகர் நாகமணியை வாங்கிச் செய்வித்த தாகக் கூற ஏனையவை மாநாகரின் விருப்பப்படியே நாகமணிச் சிலம்பு செய்விக்கப் பட்டதாகக் கூறுகின்றன.

**04. திருமணம்**

சிலப்பதிகாரத்தில் கோவலன் "மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட..." (சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துப் பாடல்) தீவலம் வந்து கண்ணகியை மணம் செய்ததாகக் கூறும் இளங்கோ இருவரும் கூடிவாழ்ந்த வாழ்வை,

"தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லென ஒருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து - நாமம்
தொலையாத இன்பமெல்லாம் துன்னினார் மண்மேல்
நிலையாமை கண்டவர்போல் நின்று" (சிலப்பதிகாரம். மனையறம் படுத்தகாதை)

என்று சிறப்பித்துக் கூறுகின்றார். சிலம்பு கூறலில் கண்ணகியை அவதாரமாகக் காட்டியதால் கோவலனும் கண்ணகியும் திருமணம் செய்து கொண் டாலும் இல்லறவாழ்வில் ஈடுபடவில்லை என்றே கூறப்படுகின்றது. திருமணத்தின் பின்னர் கோவலன் காமமயக்கத்தால் கண்ணகியைத் தழுவமுற்பட்டபோது இருவருக்கும் இடையே தோன்றிய அக்கினி அவர்களைப் பிரித்துவிடுகிறது. அவ்வேளையில் கண்ணகி தான் தெய்வீகப்பெண் என்றும் தன்னை எவரும் தீண்டக்கூடாது என்றும் கூறு கின்றாள். (சிலம்பு கூறல், நைவேத்தியக் காதை: செய்யுள் 1251 - 1254).

மேலும் உலகத்தோரின் பார்வையில் நான் உனக்கு மனைவியாக இருப்பேன் என்றும் நீ உனது காம மயக்கத்தைப் போக்குவதற்காகப் பொருள்கொடுத்து கணிகையர்களிடம் சென்று வரலாம் என்றும் கூறுவதாகக் கதை விரிகின்றது. (மேலது செய்யுள் 1255). எனவே உலகத்தோர் பார்வையில் கண்ணகி கோவலனின் மனைவி யாக இருந்தாலும் அவள் தீண்டத்தகாத கற்புடையவளாகவே இருந்தாள் என்றே சிலம்புகூறல் கூறுகின்றது. கோவலனார் கதையிலும் கண்ணகியின் திருமணம் இவ்வாறே கூறப்படுகின்றது. (செல்லையா, 1968: ப.125). எனினும் ஆய்ச்சியர் சேரி யில் தங்கியிருந்த வேளை யில் கோவலனும் கண்ணகியும் சாதாரண மானிடர்கள்போல உடலுறவிலும் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தைத் தரக்கூடிய வகையில் பாடப்பட்டிருப் பதைக் காணக்கூடியதாக உள்ளது.

"குரும்பைமுலை கனத்துவிம்மிக் கூர்விழிக ளவைபுரளக்
கருப்பனைய மொழிபதறக் கலை நெகிழ்ந்து வளைசரியச்
சுரும்பு மொய்த்த மெல்லணைமேற் றோகையுடன் கோவலரும்
விரும்பிமிகக் கொண்டாடி வியாகுலமுற் றிருந்தனரே" (செல்லையா. 1962: ப.204).

இவ்வாறான சித்திரிப்பு அவளின் அவதாரத் தன்மைக்கும் தீண்டத் கற்புக்கும் பொருத்தமானதாக இல்லை. கண்ணகி வழக்குரையிலும் கலிய காதையில் கோவலன் கண்ணகியின் திருமணம் ஊரெல்லாம் வாழ்த்த வேத விதி நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. இங்கு கண்ணகி சாதாரண மானிடப் பெண கவே காட்டப்படுகின்றாள். அடைக்கலக்காதையில் கோவலனார் கதையில் உ "குரும்பை முலை..." (செல்லையா, 1962: 204) என்ற பாடல் கண் வழக்குரையிலும் இடம்பெறுகின்றது. எனவே சிலப்பதிகாரமும் கண்ணகி வழக் யும் கண்ணகியை சாதாரண மானிடப் பெண்ணாகவே திருமண வாழ்வில் இணைத் காட்டுகின்றன. கோவலனார் கதை ஆரம்பத்தில் அவதாரமாகக் காட்டினா இடையில் சில குழப்பங்களும் ஏற்பட்டுள்ளன. சிலம்புகூறல் இறுதிவ அவதாரமாகவும் தீண்டத்தகாத கற்புள்ளவளாகவுமே காட்டுகின்றது.

### 05. உயிர் மீட்சி

சிலப்பதிகாரம் ஊர் சூழ்வரியில் கண்ணகி இறந்த கோவலனின் உட காண்கிறாள். வெட்டப்பட்ட உடலைத் தன்னோடு சேர்த்தணைத்தவாறு அழு புலம்பிய கண்ணகிக்கு தேவர் குழாத்துள் ஒருவனாக வந்த கோவலன் காட் கொடுத்துப் பின் வானகம் சென்றதாகவும், இது மாயமோ மற்றெதுவோ எனத் தேறா அரசனைக் கண்டு நியாயம் கேட்கப் புறப்படுவதாகவும் கூறப்படுகின்ற (சிலப்பதிகாரம், ஊர்சூழ்வரி செய்யுள் 67 - 75).

சிலம்பு கூறலில் கோவலன் கொலையுண்டதைக் கனவில் கண்ட கண்ண பாண்டியனைப் பழிவாங்கும் எண்ணத்துடன் கொலைக்களத்தைத் தேடி வருகின்றா மதுரையில் பாடசாலை மாணவன் ஒருவன் வழி காட்ட கொலைக்களத்திற்குச் சென் வெட்டப்பட்ட கோவலனின் உடலைக் காண்கிறாள். (சிலம்புகூறல், உயிர்மீட் செய்யுள் 2034). இறையருளால் ஊசியும் நூலும் பெற்று வெட்டப்பட்ட உடலை பொருத்தி உயிர்பெறச் செய்கிறாள். (சிலம்புகூறல், உயிர்மீட்சி, செய்யுள் 2059 - 2064 பின்னர் கோவலனிடம் அவனுக்கு நடந்த கொடுமைகளை நேரடியாகவே கேட்டறிந்து கொண்டு, அவனை முத்திக்கு அனுப்பி விட்டுப் பாண்டியனை பழிவாங்கச் செல்கிறாள். (உயிர்மீட்சி: செய்யுள் 2076).

உயிர்மீட்சிக்கதை சிலம்பு கூறலில் உள்ளதுபோலவே கோவலனார் கதையிலு கண்ணகி வழக்குரையிலும் சித்திரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். சிலப்பதிகாரத்தி கண்ணகி கனவோ நனவோ மாயமோ எனத் தெரியாது நிற்கிறாள். ஈழத்துக் கதைகளி அவள் கோவலனை உயிர்ப்பித்து நேரடியாகவே உரையாடுகின்றாள். இது அவளி தெய்வீகத் தன்மையினைக் காட்டுவதாகவே உள்ளது.

### 6. பாண்டியனின் மரணம்

சிலப்பதிகாரத்தில் வழக்குரை காதையில் கண்ணகி தனது சிலம்பு மணியுடை அரியெனக்கூற, பாண்டியன் தனது சிலம்பு முத்துடை அரியே எனக் கூறுகின்றான் கண்ணகி பாண்டியனிட மிருந்த தனது சிலம்பை வாங்கி உடைத்தபோது மாணிக்க பரல்கள் சிதறுகின்றன. பாண்டியன் தனது தவறை உணர்ந்து மயங்கி வீழ்ந்

விடுகின்றான் என இளங்கோ சித்திரிக்கின்றார். சிலம்புகூறல் வழக்குரைத்த காதையில் பாண்டியனுக்கும் கண்ணகிக்கும் இடையே நடைபெற்ற வாக்குவாதத்தை விரிவாக விபரிக்கின்றது. விசாரணையின் போது பாண்டியனின்தேவி அச்சிலம்பு தன்னுடைய தல்ல எனக்கூறியபோதே பாண்டியன் தான் நீதி தவறியதை உணர்ந்து கொள்கிறான். (சிலம்புகூறல், வழக்குரைத்தகாதை, செய்யுள் 2211 - 2216).

கண்ணகி தனது வழக்கை நிரூபிப்பதற்காக பாண்டியனிடமிருந்த தனது சிலம்பைச் சபைக்கு வருமாறு அழைக்கின்றாள். அரண்மனைப் பெட்டகத்திலிருந்த சிலம்பு கண்ணகியின் தெய்வீகத் தன்மையால் சபைக்கு வருகிறது. (சிலம்புகூறல், வழக்குரைத்த காதை, செய்யுள் 2258 - 2259). அவ்வாறே தட்டானிடம் இருந்தபோது கருடனால் கவர்ந்து செல்லப்பட்ட பாண்டியனின் சிலம்பையும் சபைக்கழைக் கின்றாள். கண்ணகி தனது சிலம்பு மாணிக்கப் பரல்கள் எனக்காட்டி நிரூபித்த பின்னர் பாண்டியனிடம் பழிக்குப்பழி கேட்கின்றாள். பாண்டியன், “உனது மடியும் கிழித்து மயிரும் கொய்து மார்பையும் அரிந்து மானபங்கம் செய்து துரத்துவேன். அதற்கிடையில் இங்கிருந்து போய்விடு” எனக்கூறியபோது கண்ணகி ஆத்திரம் கொண்டு துர்க்கைபோல வடிவெடுத்து பாண்டியன் நகைத்த தனது மார்பைத்திருகி எறிந்தும் சிலம்பை உடைத்தும் அக்கினியை ஏவி பாண்டியனையும் அழித்து மதுரையை எரிக்கிறாள் எனச் சிலம்புகூறல் விபரிக்கின்றது. (சிலம்புகூறல், மதுரைத் தகனக்கதை: செய்யுள் 2309 - 2311).

கோவலனார் கதையிலும் கண்ணகியின் வழக்குரை, பாண்டியனின் மரணம், மதுரைத்தகனம் ஆகியவை சிலம்பு கூறலை ஒத்ததாகவே உள்ளது. கண்ணகி வழக்குரையில், சிலம்புகூறலில் உள்ள கருடன் சிலம்பைக் கவர்ந்த கதை தவிர ஏனைய பகுதிகள் ஒத்ததாகவே உள்ளது. சிலப்பதிகாரத்திலும் வழக்குரையின் அடிப்படை யான அம்சம் ஈழத்துக் கதைகளுடன் ஒத்ததாகவே காணப்படுகின்றது.

## 07. பத்தினி வழிபாடு

சிலப்பதிகாரம் மதுரைக் காண்டம் கட்டுரைக்காதையில் மதுரையை எரித்த கண்ணகியின் முன் மதுராதிபதித் தெய்வம் தோன்றி அவளின் முற்பிறப்புத் தொடர்பான விபரங்களைக் கூறியதாகவும், பின் கண்ணகி திருச்செங்குன்றில் வேங்கைமர நிழலில் வானவருடன் வந்த கோவலனுடன் இணைந்து வானகம் சென்றதாகவும் கூறப்படுகின்றது. வஞ்சிக்காண்டத்தில், திருச்செங்குன்றத்து மலையில் கண்ணகி வானவருடன் சென்றதைக் கண்ட மலைவாழ் குறவர்கள் அச்செய்தியைச் செங்குட்டுவனுக்குக்கூற அவன் கண்ணகிக்குக் கோட்டமமைத்து வழிபாட்டை ஆரம்பித்து வைத்ததாகக் கூறப்படுகின்றது.

செங்குட்டுவன் ஆரம்பித்த வழிபாட்டில் பல நாட்டு மன்னர்களும் கலந்து கொண்டனர். கடல்சூழ் இலங்கைக் கயபாகு மன்னனும் இங்கு வந்து வழிபட்டதுடன் கண்ணகி வழிபாட்டை இலங்கைக்கும் கொண்டு சென்றதாக சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரை கூறுகிறது. சிலம்பு கூறலில் மதுரையை எரித்த கண்ணகி இடையர் சேரியைத் தாண்டி இலங்கைக்கு வந்து பல்வேறு தலங்களிலும் அற்புதங்கள் செய்து பின்னர் வற்றாப்பளைக்கு வந்து நந்திக் கடற்கரையில் இடைச்சிறுவர் களுக்குக்

காட்சிகொடுத்துப் பின் கதிர்காமம் சென்று முருகனோடு இணைந்த கூறப்படுகின்றது. (சிலம்புகூறல், குளிர்ச்சி : செய்யுள் 2383 - 94).

கோவலனார் கதையில் கண்ணகி இலங்கைக்கு வந்ததாகக் கூறப்படவில் கண்ணகி வழக்குரையிலும் இடைச்சியர்கள் வழிபட்டதுடன் கதை முடிகின் எனவே சிலப்பதிகாரத்தில் கண்ணகி வழிபாட்டை கயபாகு மன்னன் இலங்கை கொண்டுவந்ததாகக் கூற, சிலம்புகூறல் கண்ணகியே இலங்கைக்கு வந்தத கூறுகின்றது.

08. முடிவுரை

இளங்கோவடிகள் தனது நூல் நோக்கமான அரசியல் பிழைத்தோர்க்கு அ கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்துவ ஊட்டும் என்ற மூன்று கருத்துக்களையும் சிலம்பின் காரணமாக உணர்த்தும் வகை சிலப்பதிகாரத்தை அமைத்ததால் அவரின் கண்ணகி மானிடப் பெண்ணாக வ தெய்வீக நிலையை அடைகின்றாள். ஈழத்துச் சிலம்பு கதைகளை எழுதியவர் கண்ணகியின் தெய்வீகத் தன்மையை எடுத்துக் காட்டுவதே நோக்கமாக இருந்தத இவர்கள் கண்ணகியை சாதாரண மானிடப் பெண்ணாகக் காட்டவில்லை. சிலம்புகூ உமையின் அவதாரமாகவும், கோவலனார் கதை ஆதிபத்திரகாளியின் அவதாரமாகவு கண்ணகி வழக்குரை பரராச முனிவரின் தவக்குழந்தையின் அவதாரமாகவு காட்டுகின்றன. இதற்கேற்றவாறு பாத்திர வளர்ச்சியில் சிலப்பதிகாரத்திலும் ஈழத்து கதைகளிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பயன்படுத்தப்பட்ட துணை நூல்கள்

இரகுநாதன், ம., (1989). சிலம்புகூறல் - ஓர் ஆய்வுப்பதிப்பு முதுகலைமாணிப்பட்ட ஆய்வேடு. யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

இரகுநாதன், ம., (2014). சிலப்பதிகாரமும் ஈழத்துக் கண்ணகி வரலாற்றுக் காப்பியமும் ஒப்பாய்வு. யாழ்ப்பாணம்.

கந்தையா, வி.சீ., (1968). கண்ணகி வழக்குரை. காரைதீவு. மட்டக்களப்பு.

சாமிநாதையர், உ.வே., (1982 இரண்டாம் பதிப்பு). எண்சரித்திரம். சென்னை.

சாமிநாதையர், உ.வே., (1934 இரண்டாம் பதிப்பு). சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும். சென்னை.

சுப்பிரமணியம், ச.வே., (1977). சிலம்பும் சிந்தாமணியும் ஒப்பாய்வு அறிமுகம். சென்னை.

செல்லையா, ம.சே., (1962). கோவலனார்கதை. வியாபாரிமூலை, பருத்தித்துறை.

Veluppillai, A., (1989), A Comparison of Some of the tamil Version of the 'Ankletstory' in Sri Lanka, Journal of the institute Asian Studies, March 1989, Val.vi no 02 page 87.